# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| | | |
|---|---|---|
| தரம் : 04 | சுற்றாடல் சார் செயற்பாடுகள்<br>பெயர் / சுட்டெண் : ........................................................................ | நேரம் :<br>1.30 மணித்தியாலம் |


**(01) சரியான விடையின் கீழ் கோடிடுக.**


1) அழகு சாதனப் பொருட்களில் சேர்க்கப்படும் தாவரம் எது?
1. கற்றாளை 2. நாகதாளி 3. ஆமணக்கு

2) ஆன்மீகச் செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன்களில் ஒன்று?
1. மனம் அமைதி பெறல் 2. உடல் வளர்சியடைதல் 3. மனம் சோர்வடைதல்

3)  அருகில் தரப்பட்டுள்ள படத்தில் இந்தியாவிற்கு தெற்கே அமைந்துள்ள நாடு?
1. நேபாளம் 2. இலங்கை 3. பூட்டான்

4) ஓடுகளை கொண்டிராத பிராணி எது?


1. மீன்



2. ஆமை


3. நத்தை

5) சட்டி, பானை செய்வோர் பயன்படுத்தும் உபகரணம்.
1. திருகை 2. வனைசில்லு 3. உளி

6) எமது உடல் வளர்ச்சிக்குத் தேவையான போசணைக் கூறு?
1. கொழுப்பு 2.மாப்பொருள் 3.புரதம்

7) இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு?
1. 1972 2. 1948 3.1945

8)  அருகில் தரப்பட்ட உருகாட்டும் விளையாட்டு.
1. கரப்பந்தாட்டம் 2. வலைப்பந்தாட்டம் 3. உதைபந்தாட்டம்

9) பேரூந்து வண்டியில் நாம் ஏறவேண்டிய இறங்க வேண்டிய சரியான முறை.


1. பின்னால் ஏறி முன்னால் இறங்குதல்
2. முன்னால் ஏறி பின்னால் இறங்குதல்
3. பின்னால் ஏறி பின்னால் இறங்குதல்

10) வீட்டுத் தோட்ட பயிரை சேதமாக்கும் பூச்சிகளை பிடித்துண்ணும் பிராணி அல்லாதது.
1. செண்பகம் 2. ஆந்தை 3. கிளி

11) சிவப்பு நிறச்சாயத்தையும் மஞ்சள் நிறச்சாயத்தையும் கலக்கும் போது பெறப்படும் நிறம்.
1. செம்மஞ்சள் 2. கருநீலம் 3. கறுப்பு

(12) இலங்கையின் மாவட்டப்பிரிவுகள் எத்தனை?
1) 18 2) 25 3) 9


kalvi.lk

(13)  அருகில் தரப்பட்டுள்ள உபகரணத்தை பயன்படுத்துபவர்?

1. மீனவர் 2. கொல்லர் 3.மரவேலை செய்வோர்

(14) சித்திரை மாதத்தில் பூக்கும் மரம்?

1. இலுப்பை 2. முள்முருக்கு 3.இறப்பர்

(15) மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன்?

1. பராக்கிரமபாகு 2. மகாசேனன் 3.துட்டகைமுனு

(16) தோட்டவேலிகளுக்கு நடக்கூடிய தாவரம்.

1.வேம்பு 2. தென்னை 3. கிளிசிறிடியா

(17) உப்புத்தூள் விரைவாகக்கரைவது?

1. வெந்நீரில் 2. கொதித்தாறியநீரில் 3. குளிர்ந்தநீரில்

(18) ஒருவரது எதிர்கால எதிர்பார்ப்பாக இருக்க முடியாதது?

1. வைத்தியராதல் 2. திருடராதல் 3. ஆசிரியராதல்

(19) இலங்கையின் தேசியக்கொடியில் உள்ள நிறங்களில் பச்சை நிறக்கீலம் குறித்து நிற்பது.

1. தமிழர் 2. முஸ்லிம் 3. சிங்களவர்

(20) பித்தளைப் பாத்திரத்தை மினுக்குவதற்கு பொருத்தமானது.

1. சுட்டஉமி 2. பழப்புளி 3. தேங்காய்ப்பூ

(11/2 X 20 = 30 புள்ளிகள்)

Education கல்வி அதியாபன

**(02) பின்வரும் வினாக்கள் சரியாயின் ☑ எனவும் பிழையாயின் ☒ எனவும் அடையாளம் இடுக.**

1) நீர் தேங்கி நிற்கும் இடங்களில் நுளம்புகள் வேகமாகப் பரவும் ( )

2) உணவு சமைக்கும் போது "ஏப்ரன்" அணிவது பாதுகாப்பானது ( )

3) இலங்கையின் மிகப்பெரிய மாவட்டம் மன்னார் ஆகும் ( )

4) மஞ்சள்நிறக் காய்கறிகள் பழங்களில் உயிர்ச்சத்து A அதிகம் உண்டு ( )

5) மயிர்க் கொட்டி இலைகளுக்கு சேதத்தை ஏற்படுத்தும் பிராணியாகும் ( )

(5 X 2 = 10 புள்ளிகள்)

**(03) பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.**

(பழைய டயர், துவிச்சக்கரவண்டி, நெருப்புக்காய்ச்சல், மண்சரிவு, மகாவம்சம்)

1) எரிபொருள் இன்றி பயணம் செய்ய ............................................. உதவும்.

2) எமது நாட்டின் பண்டைய வரலாற்றை அறிய ................................. என்ற நூல் உதவும்.

3) .................................. களைக் கொண்டு சாடிகளைத் தயாரிக்கலாம்.

4) அதிக மழை வீழ்ச்சி காரணமாக .........................................அபாயம் ஏற்படலாம்.

5) அசுத்த நீரைப் பருகுவதால் ........................................... ஏற்படலாம்

(5 X 2 = 10 புள்ளிகள்)


kalvi.lk

(04) பின்வரும் பாடலைப் பூர்த்தி செய்க.

........................................ வாழ்வதுவும் இந்நாடே

........................................ வாழ்வதுவும் இந்நாடே

ஆழ்கடல் ........................................ இந்நாடே


........................................வாழ்வதுவும் இந்நாடே


மலைகள் .................................... இந்நாடே

(5 புள்ளிகள்)

(05) பின்வரும் வரிப்படங்களுக்கு பொருத்தமான விடயங்களை தொடர்பு படுத்துக.











நொருங்கக்கூடியது

வைத்தியசாலை


கொலரா,வயிற்றோட்டம், போன்ற நோய்களைப் பரப்பும்

உலக நிலைப்பாடு

கட்டடச் சுவரின் நிலைக்குத்தைப் பரிசோதித்தல்

(10 புள்ளிகள்)

(06) படத்தில் காட்டப்பட்டுள்ள தேசிய இலச்சினையில் ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.




A) ............................................

B) ............................................

C) ............................................

D) ............................................

E) ............................................

F) ............................................

G) ............................................

(7 புள்ளிகள்)



kalvi.lk

(07) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| மதம் | பண்டிகை | வழிபாட்டிடம் |
|---|---|---|
| பௌத்தம் | ....................... | ....................... |
| ....................... | தைப்பொங்கல் | ....................... |
| இஸ்லாம் | ....................... | பள்ளிவாசல் |
| கிறீஸ்தவம் | நத்தார் | ....................... |

(5 புள்ளிகள்)

(08) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1) உணவு பழுதடையாமல் நீண்டகாலம் பேணக்கூடிய நவீன முறைகள் 2 தருக?

1) ....................................................2) ....................................................

2) நாம் பொதுவாகப் பயன்படுத்தும் பொருட்கள் 2 தருக?

1) .................................................... 2) ....................................................

3) நீரைச் சுத்திகரிக்கக் கூடிய வழிமுறைகள் 2 தருக?

1) ....................................................2) ....................................................

4) வீட்டுத் தோட்டத்தினால் கிடைக்கும் பயன்கள் 2 குறிப்பிடுக?

1) ....................................................2) ....................................................

5) பொதிசெய்யப்பட்டுள்ள உணவில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் 2 தருக?

1) ....................................................2) ....................................................

6) தேசியக் கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?

1) ....................................................2) ....................................................

7) தையல் வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணங்கள் 2 தருக?

1) .................................................... 2) ....................................................

8) இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் எது?

1) ....................................................2) ....................................................

9) புரதச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் நோய் ஒன்று தருக?

1) ....................................................2) ....................................................

10) இலங்கையின் தேசிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள இடங்கள் 2 தருக?

1) ....................................................2) ....................................................

18 புள்ளிகள்



kalvi.lk

(09) பின்வரும் சிங்களச் சொற்களை தமிழ் கருத்தில் எழுதுக.

1185

1) தொஸ்தர :..................................

2) ஹால் :...................................

3) வெசிகிலிய ஹொஹேத :..................................

(10) ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ்க்கருத்தை எழுதுக.

1) Coconut : ......................................

2) Rain bow : ...................................

( 5 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page